ST. ANNE'S GENERALATE
Madavaram | Chennai - 600 060
Tamilnadu | India

FEBRUARY 2023

AGNL

Volume : 02 Issue : 18

# Lenten Season - 2023

On Wednesday, we began the season of Lent which is our preparation for the Easter celebration of Jesus' Resurrection. The word "Lent" is an old English word which means "springtime." Lent is not all doom and gloom. It is a time in imitation of Jesus spending forty days in the desert through prayer, fasting from food accompanied by forgiving others and not bearing grudges and helping the poor. May this Lent really be a new springtime in the lives of each of us and we like Jesus in the desert for forty days overcome temptations and thus be well prepared to celebrate Easter.

## First week of Lent

### 'Going to the desert'

**Genesis 2 :7-9, 3:1-7, Romans 5 :12,17-19, Matthew 4:1-11**

The first reading recounts the story of how Adam and Eve turned away from God. The psalm is a repentant appeal to the goodness of God. The second reading reminds us that even though we are sinners, we are saved through the obedience of Jesus Christ. And the Gospel tells us how Jesus went to the desert to fast and pray for 40 days and resisted the temptations. Many a times we miss the clear understanding of sin. We think that sin is breaking a commandment or breaking a law, but sin is breaking a heart. When we break a heart, we are breaking God's heart. Because what sin means is a refusal to love. That is what sin is. It is not breaking a law; it is breaking a relationship.

### Jesus in the desert



Jesus fasted in the desert and overcame the devil's temptations. Jesus never sinned, but in the desert, he was tempted. During these forty days of Lent, we remember Jesus in the desert as we try to overcome temptation in our lives and to overcome sinfulness. There is practically no hiding place or shelter in the desert and the difficulties of the desert make whatever is inside a person come to the surface. The desert tests and shows up a person as she is. Lent is an invitation to us to take the courageous step of "going into the desert" and not hiding from what lies hidden deep within us. Lent is a time to put our souls before a mirror and see ourselves as we really are. Lent is an invitation to allow our sin, darkness and wounds come to the surface. So that we can deal with them and allow them to be healed by the grace of Jesus. During these forty days of Lent, we do not hide from our sinfulness or prevent God speaking to us or healing us during this Lent. It is only when we admit something that we can deal with it. The first stage in overcoming anything is to admit the problem. If we remain in denial, we miss out on the grace of God to heal us and renew us and make us whole. During Lenten season we say no to the devil's temptations to continue committing sin, instead we trust in our heavenly Father like Jesus in the desert.

**Reading**: Matthew 4:1-11

## What Did Jesus Do?

The story of Jesus in the wilderness shows us how - with His help and with Him at our side - we can overcome our own temptations. Let us take these three temptations in turn. Jesus goes into the wilderness and fasts for forty days and he is famished. And then the tempter came. That is usually the case, isn't it? He waits until we are vulnerable - sick or hungry or tired or lonely or discouraged.

'If you are the Son of God, command these stones to become bread.' Is it the temptation for Jesus to misuse His power or is it for Him to be a little selfish? Or is it for him to lose faith that God his Father would provide for Him? Whatever the temptation might be, the way to deal with it is the same: To turn to God's Word. Jesus quotes Deuteronomy. "One does not live by bread alone, but by every word that comes from the mouth of God." In times in our life when we are vulnerable, for whatever reason, there is nothing better we can do than turn to God's Word. God's Word provides food for the hungry, drink for the thirsty, rest for the weary, courage for the frightened, hope for the discouraged, and eternal life for the dying. What it offers to us, more than anything else, is Jesus.

It is important to remember that today's Gospel reading does not just offer us encouragement to stay rooted in God's Word. It also offers us a word of warning about God's Word. Simply put, the Devil knows the Bible, too. In the second time, he wants Jesus to prove His identity by throwing Himself down from the pinnacle or wing of the Temple. The Devil quotes Psalm 91, a beautiful Psalm that promises God's protection to God's people.

In the final Temptation, Jesus is taken to a very high mountain and shown all the kingdoms of the world and offered them all instantly if He would only fall and worship Satan. The irony is that all the kingdoms of the world already belonged to Jesus. He created them! We too are tempted to place our ultimate hope in politics or power. But that is not the way of the cross; it is not the way of God. Jesus had the same response every time when He was tempted: "It is written!" Finally, Jesus says, "Go away Satan!" let us Remember, again, James says in his letter, "Therefore, submit to God. Resist the devil, and he will flee from you" (Jas 4:7). We will be tempted in multiple ways as Jesus was, but we should always go back to the Word of God, as Jesus did. The story of Jesus overcoming the devil's temptations in the wilderness is enough. Because it shows that, what Adam and Eve could not do in the Garden of Eden, and what God's people could not do repeatedly, and what you and I cannot do on our own, Jesus was able to do. And because Jesus has won the war over the devil, you and I can go to battle against him without fear.

## Group discussion

1. By resisting the temptations, Jesus chose to depend on his Father to satisfy his deepest hunger to relate with others in an ordinary way and by not rely on reputation, power, and possessions. How do we satisfy our deepest hungers? Do we depend on prestige and power to make ourselves acceptable to others? Discuss.
2. Catholic tradition upholds three mantras during the season of Lent a. Fasting b. Prayer c. Almsgiving. How can we practice it in our day to day living?

## தவக்காலம் - 2023

இவ்வருடம் பிப்ரவரி மாதம் 22 - ஆம் நாள், புதன் அன்று நாம் அருளின் காலமான தவக்காலத்தை துவங்கினோம். இத்தவக்காலமானது கிறிஸ்துவின் உயிர்ப்பினை எதிர்கொள்ள நம்மை தயாரிக்கும் காலமாகும். 'லெண்ட்' என்ற பழைய ஆங்கில வார்த்தை 'வசந்தகாலத்தை' குறிக்கும் சொல்லாகும். தவக்காலத்தின் 40 நாட்களும் பாலைவனத்தில் செபத்திலும், நோன்பிலும் இருந்த கிறிஸ்து இயேசுவை பின்பற்றி, நாமும் செபத்தில், இறையுறவில் நிலைத்திருந்து, நோன்பிருந்து பிறரை மன்னித்து, உறவை பேணி வளர்ப்போம்.

## தவக்காலத்தின் முதல் வாரம்

### 'பாலைவனத்திற்கு செல்வோம்'

### தொடக்க நூல் 2:7-9, 3:1-7, உரோமையர் 5:12,17-19, மத்தேயு 4:1-11



தவக்காலத்தின் முதல் வாரத்தில் திருஅவை ஆதிபெற்றோரான ஆதாம், ஏவாள் எவ்வாறு இறைவனிடமிருந்து விலகி சென்றனர் என எடுத்துரைக்கின்றது. பதிலுரைப்பாடலான திருப்பாடல் 51 பாவமன்னிப்பு மற்றும் இறை இரக்கத்திற்கான மன்றாட்டாக அமைகின்றது. இரண்டாம் வாசகத்திலே புனித பவுல் உரோமையருக்கு எழுதிய திருமடலிலே கிறிஸ்து இயேசு தமது கீழ்படிதல் வழியாய் அனைவருக்கும் மீட்பை வழங்கினார் என எடுத்துரைக்கின்றார். நற்செய்தியிலே இறைமகன் இயேசு தூய ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதையும், அங்கு 40 நாட்கள் நோன்பிருந்து, அலகையின் சோதனைகளை வெற்றிகரமாக எதிர்கொண்டதையும் நற்செய்தியாளர் மத்தேயு விவரிக்கின்றார். இத்தவக்காலத்தின் முதல் வாரத்தில் நம்மை மீள்பார்வை செய்கையில் நாமும் பல நேரங்களில் பாவம் பற்றிய சரியான புரிதலை அறியாமல் இருக்கின்றோம். பாவம் வெறும் ஒரு சட்டத்தையோ, உடன்படிக்கையையோ மீறுவது அல்ல. அதையும் தாண்டி உள்ளத்தை நொறுக்கும் செயல். ஏனெனில் அன்பு செய்ய மறுத்தலே பாவம் ஆகும். நாம் உறவினை முறித்துக் கொள்கின்றோம். எனவே பாவம் பற்றிய சரியான புரிதலை பெற்றுக் கொள்வோம்.

*பாலைவனத்தில் இயேசு*

இறைமகன் இயேசு பாலைவனத்தில் நோன்பிருந்து சோதனைகளை எதிர்கொண்டார். இவர் பாவம் ஏதும் அறியாதிருந்தும் சோதனைகளை, சவால்களை சந்தித்தார். நாம் நம் அன்றாட வாழ்வில் ஒவ்வொரு முறையும் சோதனைகளை, சவால்களை எதிர்கொள்ளும் போது பாலைவனத்தில் சவால்களை எதிர்கொண்ட இறைமகன் இயேசுவை நினைவு கூர்ந்து அவரிடமிருந்து அருள் பெறுவோம். பாலை நிலத்திலே பதுங்குவதற்கோ, ஒளிந்து கொள்வதற்கோ இடமில்லை. அனைவரும் அனைத்தையும் வெளிப்படையாக அறிந்து கொள்வர். பாலைநிலம் சோதனைகளை அளித்து, உண்மையில் நான்/நாம் யார்? என்பதை நமக்கு வெட்டவெளிச்சமாக காட்டும். இதுவே பாலைநிலத்தின் சிறப்பம்சம். எனவேதான் திருஅவை தவக்காலத்தின் முதல் வாரத்திலே பாலைநிலத்திற்கு செல்லுங்கள் என நமக்கு அழைப்பு விடுக்கின்றது. தவக்காலம் என்பது நம்மை, நம் ஆன்மாவை கண்ணாடியின் முன் வைத்து நாம் யார்? என நாம் அறிந்து கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கின்றது. நம் பாவ நிலையையும், நம் உள்ளத்தை சூழ்ந்துள்ள இருளினையும், நமது புண்பட்ட, காயப்பட்ட உள்ளத்தையும் வெளிக்கொணர்ந்து இறையருளால், இறை இரக்கத்தால் குணப்படுத்தி நம்மை புதுப்பிறப்பாக புதுப்பித்துக் கொள்ளும் காலமே இந்த அருளின் காலம், தவக்காலம். எனவே இக்காலத்திலே நமது பாவநிலையை மறைத்தோ, மறுத்தோ விடாமல் இறைவனின் குணப்படுத்தலுக்காய் திறந்து வைப்போம். நமது உண்மை நிலையை நாம் உணர்ந்து ஏற்றுக் கொண்டால் தான் நாம் நலம் அடைய முடியும். சோதனைகளை எதிர் கொள்வதன் முதல் படி நமது பாவங்களை ஏற்றுக் கொள்வது. 'இல்லை' என மறுக்கையில் இறைவனின் பேரிரக்கத்தை உதறி விடுகிறோம் என்பதே உண்மை. இறைமகன் இயேசுவை பின்பற்றி தந்தையாம் இறைவனில் முழுநம்பிக்கை வைத்து நமது சோதனைகளை, பலவீனங்களை ஒவ்வொன்றாக ஏற்றுக் கொள்வோம்.

***இறைவார்த்தை*** : மத்தேயு 4:1-11

பாலைவனத்தில் இயேசு மூன்று சோதனைகளை எதிர்கொண்டார். நற்செய்தியில் இவற்றை வாசித்து, தியானிக்கும் நாம், எவ்வாறு இறைவன் நம் அருகில் இருக்க அவரின் துணையால் சோதனைகளை, சவால்களை எதிர் கொள்வது? என சிந்தித்து உணர்ந்து கொள்வோம். இறைமகன் இயேசு 40 நாட்களாக பாலைவனத்திலே நோன்பிருந்து உடல் சோர்வுற்றிருந்தார். சோர்ந்திருக்கும் நிலையே சோதனைக்கு சாதகமான சூழல். பசித்து, சோர்ந்து, தனித்து. தளர்ந்து இருக்கும்போது தான் சோதனைகள் நம்மை மேற்கொள்ளும். சாத்தானும் 'நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படிக் கட்டளையிடும்' என சோதிக்கின்றான்.

இது இறைமகனின் சக்தியை, ஆற்றலை தவறாக, சுயநலத்திற்காக, தந்தை கடவுள் மீது நம்பிக்கையை இழக்கச் செய்யும் ஒரு யுக்தியாகும். இயேசுவும் இணைச்சட்டநூலை மேற்கோள் காட்டி 'மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்' என பதிலளிக்கின்றார் (மத் 4:4). நமது சோதனை வேளையில் இறைவார்த்தையில் நம்பிக்கை கொள்வோம். வார்த்தையே மனுவுருவாகி நம் மீட்பராய் அருகிலிருக்கின்றார் என உறுதியாய் நம்புவோம். இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு செய்தி தீயோனும் இறைவார்த்தையை நன்கு அறிவான் என்பதே.

இரண்டாம் முறையாக தீயோன் கோவிலின் உச்சிக்கு அழைத்து திருப்பாடல் 91-ஐ பயன்படுத்தி 'நீர் இறைமகன் என்றால் கீழே குதியும்'(மத் 4:6) என சோதிக்கின்றான். இறை நம்பிக்கைக்கு எதிரான இச்சோதனையை சரியான விதத்திலே எதிர்கொள்கின்றார் இயேசு. இறுதியாக உலக அரசுகள் அனைத்தையும் காட்டி, 'நீர் நெடுங்சாண் கிடையாக விழுந்து என்னை வணங்கினால், இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்'(மத் 4:8-9) என்றது. இதில் முரண் என்னவெனில் உலகையும் அதில் உள்ள யாவையும் படைத்து, உருவாக்கியவர் தந்தை இறைவனே. நாமும் பல நிகழ்வுகளில் நம் நம்பிக்கையை இழந்து விடுகின்றோம். அரசியல் மற்றும் அதிகாரத்திற்கு அடிபணிந்து விடுகின்றோம். இது சிலுவையின் வழியல்ல என உணரவும் இறைவனே நம் நம்பிக்கை என்பதை மறந்து விடுகின்றோம். நாமும் சோதனைகளில் தீயோனை கண்டறிந்து விரட்டியடிக்க கற்றுக் கொள்வோம் (யாக் 4: 7-8). இயேசுவின் அருகில் சென்று, நம் பாவங்களை அறிக்கையிட்டு, நம்மை தூய்மைப்படுத்திக் கொண்டால் தீயோன் நம்மை விட்டு விலகி சென்று விடுவான் என்பது உறுதி. எனவே நாம் இறைவனிடம் சரணடைவோம், மீட்படைவோம்.

நாமும் அன்றாடம் பல வழிகளில் சோதிக்கப்படுகின்றோம். ஒவ்வொரு சோதனையிலும் இறைவார்த்தையில் ஊன்றியிருப்போம். வார்த்தையே மனுவுருவான இறைமகன் இயேசுவிடம் நிலைத்திருப்போம். இயேசு எவ்வாறு சோதனைகளை எதிர்கொண்டார் என்பதிலிருந்து நாமும் பாடம் கற்றுக் கொள்வோம். மாய உலகம் அளிக்கும் புகழ், பதவி, அங்கீகாரம் இவற்றிற்கு மயங்கி விடாமல் இறைவனையே இறுகப் பற்றிக் கொள்வோம். அப்போது மீட்பு நம் ஒவ்வொருவருக்கும் உரித்தாகும். கடவுளாக மாற விரும்பி சோதனையில் சிக்குண்ட ஆதிபெற்றோரை பின்பற்றாமல், நன்மைக்கும், தீமைக்கும் இடையில் நடைபெறும் போராட்டத்தை பாலைவன அனுபவத்திலிருந்து நாம் உணர்ந்து, புரிந்து, ஏற்றுக் கொண்டு இறைமகன் இயேசுவிடம் நம்மையே முழுமையாக ஒப்படைப்போம். சோதனைகளை இறையாற்றலுடன் எதிர்கொள்வோம்.

*குழும விவாதத்திற்கு*

01. அதிகாரம், பொருள், உடமைகள், இன்பம் இவற்றின் பிடியிலிருந்து தன்னை விடுவித்து எளிய வாழ்வு முறையை மேற்கொண்ட இறைமகன் இயேசு கிறிஸ்து, தந்தை மீது கொண்ட எல்லையற்ற அன்பினால் எல்லா சோதனைகளையும் எளிதாக எதிர்கொண்டார், வெற்றி கொண்டார். இவ்வுலகில் துறவியராய் வாழும் நாம் எதிர் கொண்ட ஆழமான தேவைகள் (hunger) யாவை? நாம் நமது ஆற்றல், கௌரவம் இவற்றில் நம்பிக்கைக் கொண்டு அதன் அடிப்படையில் பிறரை ஏற்றுக் கொள்கின்றேனா? விவாதிப்போம்.

02. தவக்காலத்திலே கிறிஸ்தவ மரபு நோன்பு, செபம் மற்றும் தானம் ஆகிய மூன்று அறநெறிகளை பின்பற்ற நம்மை அழைக்கின்றது. நாமும் நமது குழுமத்திலும், தனிப்பட்ட வாழ்வு முறையிலும் இதனை எவ்வாறு பின்பற்றலாம்? என கலந்துரையாடல் செய்வோம்.

## Second week of Lent

### "Listen to Him"

### Genesis12:1-4a, 2Timothy 1:8b-10, Matthew 17:1-9

As we enter into the second week of Lent, our task is to continue to examine our hearts and to repent in order to prepare ourself for the glorious paschal mystery. As human beings we do not like change, we resist it as much as we can. But as much as we can resist, change is a part of our life. We are pilgrims on move to a more permanent dwelling place, a place of total union with God.

**Divine call**

God called Abraham to become the spiritual father of the people of God (Genesis12:1-4a). He has to take his relatives and to depart from his country and his father's house to a land that the Lord would show. He was asked to sacrifice all familiar places and the people he knew, and to move to a place shown by God Himself. God make a promise to Abram, that of him, He would make a great nation, that He would bless him and make great his name. Abram loved God and lived his life searching for God's voice and being religiously obedient, and entered the unknown land. Abram listens to God, accepts this call-in faith and with him a new nation is formed. As religious we too are called by God like Abram. Are we listening to God's voice? Today once again, in the season of Lent, we are reminded to listen God's voice to become a blessing for ourself and for others.

God calls us and keeps on communicating to us. (2Timothy 1:8b-10). In the midst of trials and suffering, we need to rely on the power of God. St.Paul in the second reading affirms that God offers us salvation and sanctification as a pure gift and not as the result of our works. We need to constantly tune ourself to listen to His voice.

**Reading:** Matthew 17:1-9



In the Gospel reading Evangelist Matthew narrates this glories event - the Transfiguration. The Greek word for "transfigured" is 'metemorphothe,' from which we get the word metamorphosis. We use this word to describe the change that occurs when a caterpillar becomes a butterfly. Here are few things we need to note that will enable us to understand this great event 'Transfiguration.'

- Jesus' "face shone like the sun and his clothes became dazzling white." This reminds us of Moses at Sinai. After his encounter with God, Moses' face shone so brightly that the people were frightened and Moses had to wear a veil over his face (Exodus 34:29-35). The disciples know the Moses story and surely make this connection.
- Elijah and Moses represent the Prophets and the Law. They were talking about the passion and death of Jesus. Elijah was lifted into the heavens before his physical death, he is still looked to by Jews today as a fore-runner of the Messiah.
- An interesting experience that Elijah, Moses and Jesus share their 40 days fast: (Exodus 34:28, 1 Kings 19:8, and Matthew 4:2). This gives us an important message that if we want to transform, change our attitude or behaviour, we need to renounce worldly affairs and undergo 'Abba experience' i.e., experiencing the Lord in the depth of our being.
- Jesus wanted His Sonship to be revealed to them with the voice of the Father telling them that Jesus is His beloved Son in whom He is well pleased and they ought to listen to Him. The one we listen to is the Son of God, Jesus, transfigured in his humanity.
- "Listen to him." This is directed at Peter and the others. This is also directed at us today. To listen to Jesus is to hear what He says; to accept what He says; to make it one's own, to identify with it fully. A listening heart is a heart warmed by the love of God and taught by His words. Prayer is better described as listening than speaking. We need to spend some time echoing His words or just listening to the mood of love and peace in prayer.
- At the sound of God's voice, the disciples prostrate themselves on the ground, terrified. This is the natural process of listening to His voice. As we listen, we too surrender ourself at His feet. Later they hear the gentle voice of Jesus, "Get up (rise up) and do not be afraid." Jesus' words point to resurrection to a new life and the abolition of fear and anxiety. Yes, it is possible only when we surrender, we can hear his gentle

voice. May be this is what poet Rabindranath Tagore writes He comes… He comes… He ever comes… This is what we read in the book of revelation 'He stands knocking at our door.' imagine this scene during your day of prayer - can you hear the gentle voice of Jesus speaking to you.

The disciples see Jesus revealed in all his divine glory. It is a special moment for them as Peter confirms - 'it is good for us to be here.' The disciples were privileged to see Jesus in glory to recognize that their friend could be fully present to them and to God. Jesus saw that the experience was too much for them and told them to keep it in their hearts as they headed back towards the everyday.

Transfiguration is about Jesus and about us. When we are with him, we are with the divine. His love, grace, sacraments, peace, and compassion can transfigure us. And then we look at those around us and see as God sees them, as people capable of transfiguration. Let us be present in prayer to the Great light and brightness; allow light to invade our body and know that the light of Jesus given in baptism is never extinguished.

### Group sharing

We all need 'mountain top' experiences to help us cope with everyday challenges of life in the valleys. Have you had a 'mountain top' experience? If so, try to revisit that experience and the blessings it offered may be at retreats and long retreats. Let us share with our sisters in our community and strengthen our faith.

### A simple request to Superiors

Where ever it is possible, superiors are expected to arrange a day of silence and encourage sisters to have such experience.

## தவக்காலத்தின் இரண்டாம் வாரம்

**'இவருக்கு செவிசாயுங்கள்'**

**தொடக்கநூல் 12:1-4a, 2திமொத்தேயு 1:8b-10, மத்தேயு 17:1-9**

தவக்காலத்தின் இரண்டாம் வாரத்தில் உள்நுழையும் நாம் தொடர்ந்து நமது அழைப்பு மற்றும் பணிவாழ்வினை மீள்பார்வை செய்து மனமாற்றம் பெற்று இயேசுவின் 'இறப்பு மற்றும் உயிர்ப்பு' பெருவிழாவினை எதிர்கொள்வோம். மனித இயல்பிலே நாம் மாற்றங்களை விரும்புவது கடினம். எனவே அவற்றை மறுப்பதும், எதிர்ப்பதும் இயல்பு நிகழ்வாகின்றது. எனினும் இவற்றையும் தாண்டி மாற்றங்கள் நம் வாழ்வின் ஒரு பகுதியாக மாறுகிறது என்பதே உண்மை. மேலும் இறைவனுடன் ஒன்றித்திருக்கும் விண்ணக வாழ்வை நோக்கி பயணிக்கும் பயணிகள் நாம் எனவும் உணர்த்துகின்றது இத்தவக்காலத்தின் இரண்டாம் வாரம்.

### *இறைவனின் அழைப்பு*

தொடக்கநூலிலே (12:1-4a) யாவே கடவுள் இஸ்ரயேல் மக்களின் ஆன்மீக தந்தையாக, விசுவாசத்தின் தந்தையாக, மக்களை வழிநடத்த ஆபிரகாமை அழைக்கின்றார். அவர் தம் உறவினர்களுடன், தந்தையின் குடும்பத்திலிருந்து, நாட்டிலிருந்து புறப்பட்டு யாவே கடவுள் அவருக்கு காட்ட இருக்கும் நாட்டிற்கு செல்ல அழைக்கின்றார். தனக்கு இதுநாள் வரை நன்கு பரிச்சயமான மக்கள், இடங்கள், நிலபுலன்கள் அனைத்தையும் விட்டுவிட்டு புதிய இடத்திற்கு, சூழலுக்கு செல்ல அழைக்கின்றார். மேலும் 'உன்னை ஒரு பெரிய இனமாக்குவேன்; உன் பெயரை ஆசீர்வதிப்பேன்' என்றும் உறுதி அளிக்கின்றார். யாவே கடவுளை மிகவும் அன்பு செய்த ஆபிரகாம் அவரின் வார்த்தைக்கு செவிசாய்த்து, நம்பிக்கையுடன் கீழ்படிகின்றார். பெருங்கூட்டத்திற்கு தலைவராக்குகின்றார். துறவியராய் இருக்கும் நம்மையும் பழைய, நலம் பயக்காத நினைவுகள், தொடர்புகள் அனைத்தையும் விட்டுவிட்டு இறைவனில் ஒன்றித்து, இயேசுவின் நம்பிக்கையாளராக, சீடராக, நம்மிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை இறைவனை நோக்கி வழிநடத்த நாளும் அழைக்கின்றார். ஆபிரகாம் செவிசாய்த்தது போல் இந்த அருளின் காலத்திலே இறைகுரலுக்கு செவிமடுப்போம். மனமாற்றம் பெறுவோம்.

அழைத்த இறைவன் தொடர்ந்து நம்மை வழிநடத்திக் கொண்டே வருகின்றார் (2திமொ 1:8b -10). துன்பங்கள், சோதனைகள், சவால்களின் மத்தியில் அவரின் குரலுக்கு நாமும் செவிமடுத்து, அவரின் வழிகாட்டுதலை

உணர்ந்து நமது விண்ணகம் நோக்கிய மீட்பின் பயணத்தில் பயணிக்க புனித பவுல் அடிகளார் நமக்கு நினைவுறுத்துகின்றார். இறைவார்த்தையில் நம்பிக்கைக் கொண்டு அவரின் குரலுக்கு செவிமடுப்போமாக!

***இறைவார்த்தை:*** மத்தேயு 17:1-9

மத்தேயு நற்செய்தியாளர் இயேசுவின் தோற்றமாற்ற (உருமாற்ற) நிகழ்வினை தத்ரூபமாக விவரிக்கின்றார். கிரேக்க மூலச்சொல்லிலிருந்து பெறப்பட்ட 'தோற்றமாற்றம்' என்ற சொல் வண்ணத்து பூச்சி, கம்பளிப்புழு பருவத்திலிருந்து வண்ணத்துப்பூச்சியாக உருபெறுவதை குறிக்கின்றது. இயேசுவின் தோற்றமாற்று நிகழ்வினை உற்று நோக்கி அவரின் உருமாற்றம் நமக்கு கற்பிக்கும் பாடத்தினை அறிந்து கொள்வோம்.



- இயேசுவின் முகம் கதிரவனைப்போல் ஒளிர்ந்தது, அவரின் ஆடைகள் ஒளி போன்று வெண்மையாயின'. இந்நிகழ்வு விடுதலைப்பயண நூலிலே மோசே, யாவே கடவுளை சந்தித்து, திரும்பும் போது அவரின் முகம் ஒளிர்ந்ததை நினைவுபடுத்துகின்றது (வி.ப 34:29-35). ஆம் மனிதர் இறைவனோடு உரையாடும் போது மனம் மட்டுமல்லாது, தோற்றமும் மாற்றம் பெறுகின்றது, ஒளிவீசுகின்றது என அறிகின்றோம்.
- இயேசுவின் வலமும் இடமும் தோன்றிய எலியாவும், மோசேயும் இறைவாக்கினர்கள் மற்றும் சட்டவல்லுநர்களை குறிக்கின்றனர். அவர்கள் இயேசுவின் பாடுகள் மற்றும் மரணத்தைக் குறித்து உரையாடுகின்றனர். இறப்பிற்கு முன்னரே உடலோடு எடுத்து கொள்ளப்பட்ட எலியாவும் மெசியாவின் முன்னோடியாக யூத மக்களால் கணிக்கப்பட்டார். துன்பங்கள் வழியே மீட்பு என்பது இங்கு உறுதி செய்யப்படுகின்றது.
- எலியா, மோசே மற்றும் இறைமகன் இயேசு ஆகிய மூவரும் 40 நாட்கள் தவமிருந்து இறைவனோடு உரையாடி இறையுறவில் திளைத்தவர்களாக இருக்கின்றனர். (வி.ப 34:28, 1அர 19:8, மத் 4:2). உருமாற்றம் பெற விரும்பினால் இறைவனோடு நிலைத்திருக்க வேண்டும் என்பது கட்டாயமாகின்றது. இத்தவக்காலத்தில் நாம் மனமாற்றம் பெற விரும்பினால் செபத்திலே இறைவனோடு ஒன்றித்திருப்போம். இந்த 40 நாட்களையும் செப நாட்களாக மாற்றுவோம். தந்தை அனுபவம் பெறுவோம்.
- இயேசு தான் இறைமகன் என்பதை தந்தை வெளிப்படுத்த வேண்டும் என விரும்பினார். 'இவரே என் அன்பார்ந்த மகன், இவரிடம் நான் பூரிப்படைகின்றேன்'. சீடர்களாகிய நீங்களும் இவருக்கு செவிகொடுங்கள் என்று தந்தை இறைவன் நம்மிடமும் கூறுகின்றார். இறை குரலுக்கு, இயேசுவின் குரலுக்கு செவிமடுக்கின்றோமா? சிந்திப்போம்.
- தோற்றமாற்ற நிகழ்விலே பேதுரு மற்றும் இரு சீடர்களுக்கும் ஓர் அழைப்பு விடுக்கப்படுகின்றது 'செவி கொடுங்கள்'. இன்றும் இயேசுவின் சீடர்களாக விழையும் நமக்கும் அதே அழைப்பு அளிக்கப்படுகின்றது. இயேசுவிற்கு செவிமடுத்தல் என்பது அவரின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்வது, அவற்றை நமது வாழ்வாக்குவதாகும். இயேசுவின் வார்த்தைகளைக் கற்று, அறிந்து அவர் மீதுள்ள அன்பினால் உந்தப்பட்டு செயல்படுதலே 'செவிகொடுங்கள்' என்பதன் பொருளாகும். செபமே இறை குரலுக்கு செவிமடுக்கும் சிறந்த வழியாகும். இயேசுவின் வார்த்தைகளை நம் காதுகளில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்க நம் உள்ளத்தில் இறை இயேசுவின் அன்பும், சமாதானமும் நிறையும்.
- தோற்றமாற்ற நிகழ்விலே 'இவருக்கு செவிகொடுங்கள்' என்ற தந்தை இறைவனின் குரலை கேட்டவுடன் சீடர்கள் அச்சத்தால் முகம் குப்புற விழுந்தனர். நாம் இறை குரலுக்கு செவிமடுக்கும் போது இறையச்சம் நம்மை ஆட்கொள்ள இறைவனிடம் நாம் சரணாகதியாவோம். அப்பொழுது இறைவனின் 'எழுந்திருங்கள், அஞ்ச வேண்டாம்' என்ற குரல் நமக்கு ஆறுதல் தரும், ஊக்கமளிக்கும், உயிர்ப்பின் புதுவாழ்விற்குள் நாம் நுழைவோம். இறைவனின் குரலுக்கு செவிமடுத்தால் மட்டுமே உயிர்ப்பும், புதுவாழ்வும் நமக்கு சாத்தியமாகும். வங்க கவிஞர் ரபீந்திரநாத் தாகூர் தன்னுடைய கீதாஞ்சலியில் 'அவர் வருவார்….அவர் வருவார்….' என தனது இறையனுபவத்தை கவிதையாக வடித்துள்ளார். மேலும் திருவெளிபாட்டிலும் இறைவன் நம் கதவருகே நின்று தட்டுகின்றார் என குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் அவரின் குரலைக் கேட்கின்றோமா? பரபரப்பான, சப்தம் நிறைந்த உலகிலே அவரின் குரலை நாம் கேளாது விடுகின்றோமா?

நாம் செபத்திலே நமது உடலையும், உள்ளத்தையும் அமைதியாக்கி துல்லியமாக, மென்மையாக ஒலிக்கும் இறை குரலுக்கு செவிமடுப்போம்.

தோற்றமாற்றம்/உருமாற்றம் என்பது நமக்கும் கிறிஸ்துவுக்குமான உறவின் அடிப்படையில் நிகழ்வதாகும். நாம் கிறிஸ்துவோடு இணைந்திருந்தால், நாம் கிறிஸ்துவாக உருமாறுகின்றோம். கிறிஸ்துவின் அன்பும், அருளும், கருணையும் நம்மை கிறிஸ்துவாக உருமாற்றும். அப்பொழுது நாம் கிறிஸ்து பார்ப்பது போல் நம் குழும சகோதரிகள் மற்றும் பணித்தல மக்களை பார்ப்போம், உருமாற்றம் பெற கூடிய மக்களாக பார்ப்போம். திருமுழுக்கில் பெற்றுக் கொண்ட இப்பேரொளியை நாம் அனுபவிக்கவும், அவ்வொளி நம் உடலை ஆட்கொள்ளவும், அவ்வொளி என்றும் அணையாமல் பாதுகாக்கப்படவும் அருள் வேண்டுவோம்.

*குழும பகிர்தலுக்கு*

வாழ்வின் பள்ளத்தாக்குகளில் நாம் நாளும் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ள 'மலையனுபவம்' அத்தியாவசிய தேவையாகின்றது. நமது ஆண்டு தியானம் மற்றும் மாத ஆய்வு நாளில் நாம் பெற்ற இறையனுபவத்தை நம் குழுமத்தில் பகிர்ந்து கொண்டு நமது இறையுறவை புதுப்பித்துக் கொள்வோம்.

*இல்லத்தலைவிகள் கவனத்திற்கு*

இந்த ஆண்டு தவக்காலத்தில் அமைதி நாளை அனுசரித்து இறையனுபவம் பெற, ஊக்குவிக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

## Third week of Lent

### 'Give me this water'

**Exodus 17:3-7, Romans 5:1-2, 5-8, John 4:5-15, 19b-26, 39a,40- 42**

As we are entering into the third week of Lent, the liturgy of the day speaks about living water that gives us salvation. The first reading deals with the water that the people of Israelites drank at the rock of Horeb. Lord Yahweh instructed Moses to struck the rock to quench the thirst of the people (Exodus 17:3-7). In the second reading, St. Paul in his letter to the Romans says clearly that, while we are still sinners Christ died for us. (Rom 5:1-2, 5-8). In the Gospel reading, Evangelist John speaks elaborately on life giving water.

**Reading:** John 4:5-15, 19b-26, 40- 42



This week we meet someone who met Jesus face to face. The story of Jesus and the woman at the well is very familiar to us. This is the longest recorded conversation anyone ever had with Jesus. If we take some time and keenly read it, we can marvel at it and say how simple and profound it is. This ancient encounter is indeed valuable for what they reveal about Jesus and what they teach us about the common problems of life. Although 2000 years have passed since Jesus walked on the earth, His words remain incredibly relevant. Times change but the human heart remains the same. We have the same hopes, fears, dreams and doubts. And we struggle with the same problems: uncontrolled anger, foolish choices, misplaced priorities, hypocrisy, guilt, indifference, frivolous curiosity, misguided ambition, limited faith, convenient excuses, nagging doubt, compulsive busyness, broken dreams and personal failure. Let us now look in to the lessons, the encounter between Jesus and the Samaritan woman teaching us.

**Inclusiveness**

It was a hot day and the sun beat down on Jesus' head. He came to a well. It was called Jacob's well after the patriarch who had first dug it 2000 years earlier. He sat on the lip and thought to himself, “O, if only I could

have a drink of water." Precisely at that moment, the woman came along. It was seemingly a chance encounter. She came from the tiny village of Sychar. It was in Samaritan territory. The well was about one and half mile outside the village near the point where the two trade routes came together. As the woman looks at Jesus and He at her, four invisible walls stand between them. There is a religious wall, a gender wall, a racial wall and a moral wall. Yet our Lord found a way through all of them. He found her … and then she found Him!

Jesus by crossing racial boundaries and breaking the distinction between "chosen people" and "rejected people." He extends the mission of the Jewish Messiah to the Samaritan people, who were hated by the Jews for their history of racial mixture and religious syncretism. Because of this experience Jesus began to realize the universal scope of His mission. His ministry would not be bound by social, ethnic and religious conventions. This woman is the first non-Jew to become part of Jesus' movement in John's Gospel. Through this progression, social and religious barriers are crossed as Jesus gives to this woman an almost apostolic status: she calls others as Jesus did and they believed because of her word (Jn 4:21). It was an exercise in similar to what he experienced with the Syrophoenician woman in Mark 7:24-30. Honestly speaking, do we practice inclusiveness in our life and mission?

### Community building

Through this encounter, Jesus left us with a crucial lesson to be learned: community can only be built when we are not afraid of overcoming old prejudices and are willing to break the social conventions that dehumanize us. The living water that Jesus promised the woman, symbolized in the water that Moses made come out of the rock (Ex 17:1-7) is God's purifying water, the Holy Spirit (Jn 7:37-39), which can purify our hearts of old hatreds and hostilities and form us into a diverse people of God on earth.

### Reaching out

It was about the sixth hour when a Samaritan woman came to draw water. Nothing happens by chance in this story. Every detail is part of the outworking of God's will. And it is an immensely important point. The woman is not looking for Jesus. All she wants is water. But Jesus is looking for her. We need to go to Samaria if we want to reach Samaritans. From this, we can take a very important principle for evangelization. Reaching people for Christ is not always comfortable and many at times, it is difficult. But we have to go where people are if we want to reach them. Comfort is not the issue. The firefighter goes into the burning house to rescue those inside. He can't stand outside and say, "Come out before the house burns down." Jesus intended to save this woman so He went where she was. Do I reach out to the least and the lost to give Christ to them?

### "Go, call your husband and come back"

The fact is, she had five husbands and the man she has is not her husband (Jn 4:16-18). Certainly, she is currently living in a sinful relationship with a man outside of marriage. On one level it appears that Jesus is being insensitive. Why bring up anything about her past? Is Jesus trying to embarrass her? The answer is no. The words of Jesus are a verbal slap in the face and yet, it was the most loving thing he could have done for her. There is an important spiritual principle at work here. Without conviction of sin, there can be no conversion. God sees behind the mask to the reality within. Until we come to grips with our sins and our own wilful disobedience to God, we cannot be saved. How much can a person be wrong about and still be saved?" It a normal question arises in our mind. Yes, two things are needed for salvation. That is accepting 1) I am a sinner, and 2) Jesus is the Saviour we need. If we know that we are a sinner and we are willing to trust Christ as our Saviour, we can be saved. During this season of Lent, Jesus is asking us the same question. Am I convinced of my sins and come back to Jesus for healing or do I try to deny or hide it as this Samaritan woman?

### Group activity

Let us reflect and approach the Sacrament of Reconciliation with the full consciousness that I am sinner and God is an only Saviour. May we experience the unconditional love of Lord Jesus Christ.

**Group discussion**

1. Can you recall your experience of coming back to the Lord? If you like to share, please do so.
2. Have you ever broken or overcame old prejudices and social conviction that dehumanize people? Kindly share your experience among the community sisters.

## தவக்காலத்தின் மூன்றாம் வாரம்

### 'அத்தண்ணீரை எனக்குக் கொடும்'

**விடுதலைப் பயணம் 17:3-7, உரோமையர் 5:1-2,5-8, யோவான் 4:5-15,19b-26, 39a,40-42**

இறையருளின் காலமான இத்தவக்காலத்தில் பயணிக்கும் நம்மை 'வாழ்வளிக்கும் தண்ணீரை தாரும்' என இறைவனிடம் மன்றாட திருஅவை நமக்கு அழைப்பு விடுக்கின்றது. முதல் வாசகத்திலே இஸ்ரயேல் மக்களை வழிநடத்திய முதுபெரும் தலைவராம் மோசே, மக்களின் தாகத்தை தீர்க்க ஓரேப் மலையில் யாவே கடவுளின் வழிநடத்துதலால் தண்ணீர் பொங்கியெழச் செய்தார்(வி.ப 17:3-7). இரண்டாம் வாசகத்திலே தூய பவுல் அடிகளார் உரோமையருக்கு எழுதிய மடலிலே கிறிஸ்து நாம் பாவிகளாய் இருந்த போதே நமக்காக இறந்து, மீட்பினை வழங்கினார் என இறைவனின் அருளிரக்கத்தை உரக்க கூறுகின்றார்(உரோ 5:1-2,5-8). நற்செய்தியிலே யோவான் சமாரிய பெண்ணிற்கு அளித்த வாழ்வளிக்கும் தண்ணீரைக் குறித்து விரிவாக விளக்குகின்றார்.

*இறைவார்த்தை*: யோவான் 4:5-15,19b-26,40-42


இன்றைய நற்செய்தியிலே இயேசுவை முகமுகமாய் சந்தித்து, அவரிடம் நீண்ட நேரம் உரையாடி, தன்நிலை உணர்ந்து, 'அத்தண்ணீரை எனக்குக் கொடும்' எனக் கேட்டு, புதுவாழ்வு பெற்று இயேசுவின் சீடராய் மாறிய நிகழ்வினை தியானிக்கின்றோம். மனமாற்றம் பெற்று, புதுவாழ்வு பெற உதவும் படிநிலைகளை சமாரிய பெண்ணின் மனமாற்றத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். மேலும் இந்நிகழ்விலே வலிமையான சமூக சவால்களை இறைமகன் இயேசு எவ்வாறு எதிர் கொண்டு மீட்பினை வழங்குகின்றார் எனவும், புதுவாழ்விற்கு எவ்வாறு இச்சமாரிய பெண்ணை அழைத்து செல்கின்றார் எனவும் தெளிவாக யோவான் நற்செய்தியாளர் விளக்குகின்றார். 2000 ஆண்டுகள் கடந்த நிலையிலும், அன்று நிலவிய சமூக, கலாச்சார வழிபாட்டு சூழலும், இறைமகன் இயேசுவின் அணுகுமுறையும் இன்றும், இங்கு நிலவும் சூழலுக்கு பொருத்தமுடையதாகவும், தொடர்புடையதாகவும் உள்ளது. காலங்கள் உருண்டோடியதே தவிர மக்களின் மனங்கள் மாற்றம் பெறாமல் அப்படியே இருப்பதை அறிகின்றோம். இன்றும் அடக்க இயலா கோபம், முட்டாள்தனமான தேர்வுகள், தவறானவற்றிற்கு அளிக்கும் முன்னுரிமைகள், வெளிவேடத்தன்மை, குற்ற உணர்வு, முதிர்ச்சியற்ற, அற்பமான ஆர்வம், தவறாக வழிநடத்தப்பட்ட இலக்கு, குறைவான நம்பிக்கை, வசதியான சாக்குபோக்கு, தொல்லை தரும் சந்தேகங்கள், உடைக்கப்பட்ட கனவுகள், தனிப்பட்ட தோல்விகள், கட்டாய பரபரப்பில் இருத்தல் போன்ற சோதனைகளில் சிக்கி உழன்று கொண்டு இருக்கின்றோம்.

இத்தகைய பின்புலத்தில் நாம் இறைமகன் இயேசு கிணற்றடியில் சமாரிய பெண்ணுடன் மேற்கொண்ட உரையாடலை கூர்ந்து படித்து, சிந்தித்து, இது நமக்கு தரும் வாழ்க்கைப் பாடத்தை கவனமுடன் கற்றுக் கொண்டு இயேசுவிடம் திரும்பிச் செல்வோம்.

#### *அ. அனைவரையும் உள்ளடக்கும் தன்மை*

அது ஒரு மதியவேளை. இறைமகன் இயேசு கிணற்றடியில் நின்று கொண்டிருக்கிறார். 2000 ஆண்டுகளுக்கு முன்னால் குலமுதுவர் யாக்கோபால் கட்டப்பட்ட கிணறு இது. இக்கிணற்றின் மேற்பகுதியில் அமர்ந்தவாறு தண்ணீர் குடித்தால் நலமாய் இருக்கும் என்று எண்ணினார் இயேசு. சரியாக அந்த தருணத்திலே சிக்கார் ஊரிலிருந்து சமாரிய பெண்மணி தண்ணீர் எடுக்க அங்கு வந்தார். இந்த சந்திப்பு இயல்பாக நடைபெற்றது போல் தோன்றினாலும் இறைத்திட்டத்தில் இது இடம் பெற்றிருந்தது. இந்த இடம் சிக்காவிலிருந்து ஒன்றரை மைல்கல் தொலைவில், இரண்டு வாணிப வழிதடங்கள் சந்திக்கும் ஒரு முக்கிய இடத்தில் இக்கிணறு அமைந்திருந்தது. இருவருக்கும் இடையில் நான்கு விதமான தடைச்சுவர்கள் தடையாக இருந்ததை காண்கின்றோம். 1.மதம் சார்பான தடைச்சுவர் 2. பாலின தடைச்சுவர் 3.இனம் சார்பான தடைச்சுவர் 4.ஒழுக்கம் சார்பான தடைச்சுவர். இருப்பினும் இறைவன் அப்பெண்ணை கண்டு கொண்டார். அப்பெண்ணும் நீண்ட

உரையாடலின் முடிவில் இயேசுவை கண்டு கொண்டார். இறைமகன் இயேசு யூதராக இருப்பினும் இனம் என்ற தடைச்சுவரை உடைத்து கலப்பினமான சமாரிய பெண்ணுடன் உரையாடுகின்றார். யூதமக்கள் இறைவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் என்றும், சமாரியர்கள் புறக்கணிக்கப்பட்ட மக்கள் என்ற மதச்சார்பான தடைச்சுவரையும் உடைக்கின்றார். யூதரான மெசியாவின் மீட்புப்பணியினை ஒதுக்கப்பட்ட சமாரிய மக்களுக்கும் விரிவாக்கம் செய்கின்றார். வரலாற்றிலே யூதமக்கள் சமாரியர்களை வெறுத்து ஒதுக்கினர். ஏனெனில் அவர்கள் கலாச்சாரம், பண்பாடு, மதம், வழிபாட்டுமுறைகள் பலவற்றில் பிற இனத்தவரோடு சமரசம் செய்து கொண்டனர். இயேசுவின் பணி சமூகம், பாலினம், இனம், மதம் சார்பான பழமையான போக்குகளுக்கு அப்பாற்பட்டது, அதையும் கடந்து செல்லக் கூடியது என்று கண்டு கொள்கின்றார். இந்த உரையாடலின் முடிவில் யூத இனம் சாராத சமாரிய பெண்ணுக்கு திருத்தூதர்களுக்கு ஒப்பான நிலையினை இயேசு அளிப்பதை காண்கின்றோம். இறைமகன் இயேசு பிறரை அழைத்தது போல் இவளும் சென்று பிறரை அழைத்து வந்தாள். அவர்களும் நம்பினர் (4: 39,40). இந்த ஒரு சந்திப்பு, இயேசு அளிக்கும் மீட்பிலே அனைவரையும் இணைத்துக் கொள்ளும் தன்மையை சிரியபெனிசிய பெண்ணின் மகளை குணப்படுத்தியதையும் நம் நினைவுக்கு கொண்டு வருகின்றது (மாற் 7:24-30). நாம் யதார்த்தமாக சிந்தித்தால், நாமும் 'அனைவரையும் உள்ளடக்குதல்' என்ற நிலைப்பாட்டை நமது குழுமம் மற்றும் பணித்தளத்தில் பின்பற்றுகின்றோமா? சிந்திப்போம். இயேசுவின் சீடராய் பணியாற்றும் நமக்கு இருக்க வேண்டிய மிக முக்கியமான நிலைப்பாடுகளில் 'அனைவரையும் உள்ளடக்குதல்' என்பது சிறப்பிடம் பெறுகின்றது.




### ஆ. குழுமத்தை, சமூகத்தை கட்டியெழுப்புதல்

சமாரிய பெண்ணுடன் இயேசு நிகழ்த்திய இந்த உரையாடலிலிருந்து இரண்டாவது முக்கிய பாடத்தை நாம் கற்றுக் கொள்கின்றோம். மனித மாண்பிற்கு ஊறு விளைவிக்கும் முன்சார்பு எண்ணங்கள் மற்றும் சமூக பழக்க வழக்கத்திலிருந்து நாம் மீண்டெழ வேண்டும்.அப்பொழுதுதான் இறையரசை கட்டியெழுப்ப இயலும். இஸ்ரயேல் மக்களின் தாகம் தீர்க்க மோசேயின் மூலம் பாறையிலிருந்து அளித்த தண்ணீர் இச்சமாரிய பெண்ணிற்கு இயேசு வாக்களித்த வாழ்வளிக்கும் தண்ணீருக்கு முன் அடையாளமாக அமைந்துள்ளது. இறைமகன் இயேசு அளிக்கும் தண்ணீர் தூய்மைபடுத்தும் நீர். அதுவே தூயஆவியானவர் (யோவா 7:37-39). நாமும் தூயஆவியின் வரம் பெற்றவர்களாய் நம் இதயத்தில் உள்ள எல்லா வேற்றுமைகளையும், வெறுப்புகளையும் களைந்து தூய்மை அடைந்தவர்களாய் எல்லா இன மக்களையும் ஏற்றுக்கொள்ளும் மனநிலை பெறுவோம். இவ்வாறாக நமது துறவற குழுமத்தையும், பணித்தள மக்களையும் ஒரு குழுமமாக, இயேசுவின் சீடர்களாக கட்டியெழுப்புவோம்.

### இ. சென்றடைதல்

'நண்பகல் நேரத்திலே ஒரு சமாரிய பெண் தண்ணீர் பெற அங்கு வந்தாள்'. இந்நிகழ்விலே ஒவ்வொரு நகர்வும் இறைதிட்டத்திலே இடம் பெற்றதாய் அமைந்துள்ளது. இங்கு நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது இச்சமாரிய பெண் இயேசுவை தேடி அங்கு, அவ்வேளையில் வரவில்லை. மாறாக அவளுக்கு வேண்டியதெல்லாம் தண்ணீர் மட்டுமே. ஆனால் இயேசுவோ அவளை எதிர்பார்த்திருந்தார். ஆம் நாம் சமாரியர்களுக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்றால் சமாரியா சென்றாக வேண்டும். இதுவே நற்செய்தி போதித்தலின் மிக முக்கிய பாடமாகும். மக்களை சென்றடைதல் என்பது எப்பொழுதுமே எளிய செயலோ அல்லது மகிழ்வான, வசதியான வழியோ அல்ல. மாறாக சவால்களை நாம் கடந்து செல்ல நேரிடும். தீயணைப்பு வீரர்கள் வெளியில் நின்று கொண்டு சீக்கிரம் வெளியே வாருங்கள் வீடு எரிந்து விழுகின்றது என்று கூற மாட்டார்கள். மாறாக எரியும் வீட்டிற்குள் சென்று மீட்டெடுப்பர். இயேசுவும் இச்சமாரிய பெண்ணை மீட்டெடுக்க மனமிரங்கி, பெண்ணின் இடத்திற்கே சென்று, நீண்ட நேரம் உரையாடி மீட்பினை வழங்குகின்றார். அவ்வாறே நற்செய்தி பணியாளர்களாகிய நாமும் மக்களை அவர்கள் நிலைக்கு இறங்கி சென்று அவர்களை மீட்டெடுக்க வேண்டும் என்று அறிந்து கொள்கின்றோம். அமைதியில் சிந்தித்துப் பார்ப்போம். நலிந்தோருக்கு, சிதறுண்டோருக்கு நற்செய்தி அறிவிக்க, மீட்பினை வழங்க நாம் அவர்களை நாடி, தேடி செல்கின்றோமா?

### ஈ. 'சென்று உன் கணவரை அழைத்து வா'

உண்மையிலேயே இப்பெண்ணிற்கு 5 கணவர்கள் இருந்தனர். இப்பொழுது இருப்பவர் அவள் கணவர் இல்லை (யோவா 4:16-18). உறுதியாக இப்பெண் திருமண உறவிற்கு வெளியே தவறான உறவில் வாழ்ந்து கொண்டிருந்தார் என்றே கூறலாம். ஒரு கட்டத்தில் இயேசு தம் கேள்விகளால் அப்பெண்ணை தர்மசங்கடத்திற்கு உள்ளாக்குகின்றாரோ என்ற வினா எழலாம். இயேசுவின் வார்த்தைகள் அப்பெண்ணின் முகத்தில் அறைந்தாற்போல் இருந்தாலும் இது இயேசு அப்பெண்ணின் மீது கொண்ட மிகுந்த அன்பினால், மருத்துவர் நோயாளிக்கு அளிக்கும் வலி மிகுந்த சிகிச்சைப்போல் மேலான செயல் என்பதே உண்மை. பாவத்தை குறித்த உணர்வு இல்லை எனில் மன்னிப்பிற்கும், மீட்பிற்கும், புதுவாழ்விற்கும் வழியே இல்லை. நாமும் நமது பாவநிலையை முழுமையாக உணர்ந்து, நாம் நமது முழு விருப்பத்துடன்தான் இறைவனின் அன்பிற்கு கீழ்படியாமல் தவறு செய்துள்ளோம் என்று ஏற்றுக் கொண்டால் அன்றி நாம் மன்னிப்பு பெறுவது சாத்தியமில்லை.

இறைவனின் மீட்பினை அடைய தேவையானது இரண்டு மனநிலைகள்

01. நான் பாவி என உணர்ந்து ஏற்றுக்கொள்ளும் மனநிலை.

02. மீட்பு இறைவனிடமிருந்து மட்டுமே வரும் என நம்பும் மனநிலை.

இந்த அருளின் காலமான தவக்காலத்தில் இறைமகன் இயேசு நம்மையும் தேடி வந்துள்ளார். இந்த இரு மனநிலைகளையும் நாம் கொண்டிருந்தால் நாமும் சமாரியப்பெண் போல் இறைவனின் அன்பால் தூய்மைபடுத்தப்பட்டு சிறந்த நற்செய்தியாளராய் மாற்றம் பெறுவோம். இதுவே தகுந்த காலம்.

### குழும செயல்பாடு

நான் பாவி மற்றும் இறைவனே என் மீட்பர் என்னும் மனநிலையுடன் நல்ல ஒப்புரவு அருளடையாளம் பெற்று இறைவனின் அன்பில் திளைப்போம்.

### குழும பகிர்விற்கு

01. இறைவனே என் மீட்பர் என உணர்ந்து இறைவனிடம் திரும்பி வந்த ஏதாவது ஒரு நிகழ்வினை குழும சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்வோம்.

02. மனித மாண்பினை குறைக்கும் முன்சார்பு எண்ணங்கள் மற்றும் சமூக பழக்கவழக்கங்களை உடைத்த அனுபவம் உண்டா? குழுமத்தில் பகிர்ந்து கொண்டு இயேசுவின் அன்பு சீடராய் வாழ்வோம்.

## FORTHCOMING IMPORTANT EVENTS

| | | |
|---|---|---|
| 17.04.2023 - 18.04.2023 | : | Extended Council - North & North East Region |
| 20.04.2023 - 21.04.2023 | : | Extended Council - Vijayawada Region |
| 22.04.2023 | : | Entry to the Novitiate |
| 23.04.2023 | : | First Vows |
| 24.04.2023 - 25.04.2023 | : | Extended Council - Chennai Province |
| 27.04.2023 - 28.04.2023 | : | Extended Council - Tanjore Province |
| 29.04.2023 - 30.04.2023 | : | Extended Council - Bangalore Province |
| 01.05.2023 - 31.05.2023 | : | One month retreat for Silver Jubilarians |

Dear Sisters, kindly pray for the fruitful extended Council for all the three Provinces and two Regions.